# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8101981

1. District : மாவட்டம் மதுரை
   PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு
   Year: ஆண்டு 2024
   FIR No.: மு.த.அ. எண் 10/24
   Date: நாள் 02.09.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: U/S. 7 of PC Act 1988 as amended by the PC (amendment) Act 2018
   (ii) Act சட்டம்: PC Act 1988 as
   (iii) Act சட்டம்: amended by the PC (amendment) Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் –
   Date to : நாள் வரை 29.08.2024 at 10.00 hrs
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் –
   Time to : நேரம் வரை 30.08.2024 at 11.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.09.2024
   Time : நேரம் 16.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 02.09.2024
   Time : நேரம் 17.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக திட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 65 கி.மீ, தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி துள்ளுக்குட்டி நாயக்கனூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், அஞ்சல்: T. கிருஷ்ணாபுரம், பேரையூர் தாலுகா,
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் –
   District : மாவட்டம் மதுரை மாவட்டம்.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் P. சின்னச்சாமி
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பாண்டியன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
   Date of Issue வழங்கப்பட்ட நாள் 28.05.1972
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation : தொழில் விவசாயம்.
   (g) Address : முகவரி 5/135, மேற்குத் தெரு, துள்ளுக்குட்டி நாயக்கனூர், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ராஜா, கிராம நிர்வாக அலுவலர், துள்ளுக்குட்டி நாயக்கனூர், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   –

* GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள்கள் பக்கம் 3 முதல் 7 வரை இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

பா. சின்னச்சாமி 2.9.24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

02.09.2024 at 17.50 hrs

Name: பெயர் த. சூரியகலா
Rank: நிலை ............... No. எண் ..........
காவல் ஆய்வாளர்
இ.த.க. பிரிவு
மதுரை (02/09/24)

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,**

இன்று 02.09.2024-ஆம் தேதி மாலை 16.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகா, துள்ளுக்குட்டி நாயக்கனூர் மேற்கு தெரு, கதவு எண். 5/135 என்ற முகவரியில் வசிக்கும் பாண்டியன் மகன் திரு.P.சின்னச்சாமி என்பவர் நிலையத்தில் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் P. சின்னச்சாமி, த/பெ. பாண்டியன், கதவு எண். 5/135, மேற்குத்தெரு, துள்ளுக்குட்டி நாயக்கனூர், பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை மாவட்டம் பேரையூர் தாலுகா, துள்ளுக்குட்டி நாயக்கனூர் கிராமத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 9-ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது அப்பா பாண்டியன் அவர்கள் இந்திய இராணுவத்தில் பணியாற்றியவர். எனது அம்மாவின் பெயர் செல்லம்மாள் ஆகும். எனது பெற்றோர்களுக்கு மொத்தம் 5 பிள்ளைகள். மூத்த மகன் திரு.மாரியப்பன் ஆவார். இரண்டாவது மகன் நான்தான். செல்வி மற்றும் லெட்சுமி எங்களது தங்கை ஆவார்கள். கடைசியாக என்னுடைய தம்பி திரு.பழனிச்சாமி ஆகும். எங்களது அப்பா பெயரில் துள்ளுக்குட்டி நாயக்கனூரில் ஊராட்சியிலுள்ள மொக்கத்தான்பாறை அருகில் துள்ளுக்குட்டி நாயக்கனூர் சர்வே எண். 292 - 2D மற்றும் 292 – 2O எண்ணில் கட்டுப்பட்ட சுமார் 5 ஏக்கர் 10 செண்ட் நிலம் உள்ளது. அதற்கு பட்டா எண் 798 ஆகும். அது வானம் பார்த்த பூமி ஆகும். அதில் நான் விவசாயம் செய்து வருகின்றேன். மேலும் எங்களது ஊரில் சர்வே எண். 42-2-ல் சுமார் 1 ½ செண்ட் மற்றும் சர்வே எண். 42-11ல் ½ செண்ட் ஆக மொத்தம் சுமார் 2 செண்ட் இடத்தில் வீடு அமைத்து, அருகில் தகர செட்டு அமைத்து பயன்படுத்தி வருகின்றோம். இந்த இரண்டு இடத்திற்கு தனித்தனியாக எனது அப்பாவின் பெயரில் மனைவரி தோராயப் பட்டா உள்ளது. எங்களது அப்பா கடந்த 2000-ஆம் ஆண்டு இறந்து விட்டார். அவரது பெயரிலுள்ள சொத்துக்களை நாங்கள் எங்களுக்குள் இதுவரை பாகபிரிவினை செய்யவில்லை. அவருக்கான வாரிசுதாரர்கள் எனது அம்மா செல்லம்மாள் மற்றும் நானும் என் உடன் பிறந்த சகோதரர்கள், சகோதரிகள் ஆவோம். அதற்கான வாரிசு உரிமை சான்றிதழ் பெற்றுள்ளோம். எனது அம்மா மற்றும் எனது சகோதரர்கள், சகோதரிகள்

ஆகியோர் எங்கள் அப்பாவின் பெயரிலுள்ள சொத்துகளை எங்களுக்குள் பிரித்து கொள்வதற்காக முடிவு செய்து அதற்கான பணியை அவர்கள் அனைவரும் என்னிடம் பார்த்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்கள். எனக்கு வேலை அதிகமாக இருந்தால் அதனை உடனடியாக செய்ய இயலவில்லை. எனவே கடந்த 27.08.2024-ந் தேதியன்று காலையில் M.கல்லுப்பட்டியில் உள்ள V.E.பழனிச்சாமி நாடார் திருமண மண்டபத்தில் மள்ளப்புரம் மற்றும் துள்ளுக்குட்டி நாயக்கனூர் ஆகிய இரண்டு பஞ்சாயத்திற்கும் ”மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் நடைபெற்ற முகாமிற்கு சென்று வாரிசுதாரர்களான எங்களது பெயரில் எங்களது அப்பா பெயரிலுள்ள நாங்கள் விவசாயம் செய்து வரும் பட்டா எண். 798க்கான சொத்தை பட்டா பெயர் மாற்றம் செய்வதற்காக எழுத்து பூர்வமான மனுவை என்னுடைய பெயரில் அங்கிருந்த அலுவலர்களிடம் கொடுத்தேன். அம்மனுவுடன் என் அப்பாவின் இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ், எனது அப்பா பெயரில் உள்ள பட்டா புக், கணினி சிட்டா, வில்லங்சான்று மற்றும் ஆதார் அட்டை ஆகியவற்றை இணைத்து கொடுத்தேன். அன்றைய தினம் மனு கொடுப்பதற்கு கூட்டமாக இருந்ததால், அங்கிருந்த அலுவலர்கள் உங்களது மனுவை கணினியில் பதிவு செய்து உங்களது துள்ளுக்குட்டி நாயக்கனூர் VAO திரு.ராஜா அவர்களிடம் கொடுத்து விடுவோம். அவரும் இந்த மண்டபத்தில்தான் உள்ளார், அவர்களை நேரில் பார்த்து விபரம் கூறிவிட்டு செல்லுமாறு கூறினார்கள். அதன் காரணமாக சற்று நேரத்தில் அம்மண்டபத்தில் இருந்த துள்ளுக்குட்டி நாயக்கனூர் VAO திரு.ராஜா அவர்களை சந்தித்து, நான் கொடுத்த மனு சம்பந்தமாக விபரம் கூறினேன். அப்போது அவர் என்னிடம், நீங்கள் கொடுத்த மனுவை என்னிடத்தில் தான் அனுப்பி வைப்பார்கள். அதற்கு நான்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார். அதற்கு நான் மேலும் அவரிடம், எனது அப்பாவின் பெயரிலுள்ள வீடுகளான துள்ளுக்குட்டி நாயக்கனூர் சர்வே எண். 42-2 மற்றும் சர்வே எண். 42-11 ஆகிய இரண்டு தோராய மனைவரி பட்டாவை காண்பித்து, இந்த இடத்தையும் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு மனு ஏதும் தனியாக இப்போது கொடுக்கலாமா எனக் கேட்டேன். அதற்கு அவர் தற்போது கொடுக்க வேண்டாம், என்னை நாளை எனது அலுவலகத்திற்கு வந்து சந்தியுங்கள், அதற்கான ஏற்பாடுகளை நான் செய்து தருகிறேன், அப்போது இன்று கொடுத்த மனுவிற்காக ஒப்புகை சீட்டையும் கொடுக்கிறேன் எனக்கூறினார். அதன் காரணமாக நான் எங்கள் பெயரில் வீடுகளின் இடத்தை மாற்றுவதற்கு தனியாக மனு ஏதும் கொடுக்கவில்லை.

பிறகு திரு.ராஜா அவர்கள் கூறியபடி மறுநாள் 28.08.2024-ந் தேதி காலை சுமார் 9.45 மணியளவில் T.கிருஷ்ணபுரத்தில் உள்ள துள்ளுக்குட்டி நாயக்கனூர் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்றேன். அச்சமயத்தில் மனு கொடுத்த மக்கள் மனு இரசீது வாங்குவதற்காக கூட்டமாக இருந்தார்கள். அங்கிருந்த VAO ராஜா அவர்களை சந்தித்தேன். அவர் என்னிடம் இன்று கூட்டமாக இருக்கிறது, அதனால் நாளை காலையில் வந்து பார்க்குமாறு கூறினார். திரு.ராஜா கூறியபடி மறுநாள் 29.08.2024-ந் தேதி காலை சுமார் 10 மணியளவில் அவரது அலுவலகத்திற்கு சென்று திரு.ராஜா அவர்களை சந்தித்து, எனது மனு சம்பந்தமாக கேட்டேன். அப்போது நான் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தில் கொடுத்த மனுவிற்கான TN/REV/MDU/MMCR/ 27AUG24/9942949 என்ற ஒப்புகை சீட்டை என்னிடம் கொடுத்தார். மேலும் அவர் எங்களது வீடுகளின் இடத்தை பட்டா பெயர் மாற்றத்திற்கான ஒரு அச்சிட்ட மனுவை நிரப்பி என்னிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டார். பின்பு அவர் என்னிடம், எங்களது நிலத்தை பெயர் மாற்றம் செய்வது சம்பந்தமாக பேரையூர் தாலுகா அலுவலகத்திற்கு சென்று UDR க்கு முன்பு மற்றும் பின்பு சிட்டா அடங்கலை பெற்று வரும்படி கூறினார். மேலும் VAO ராஜா என்னிடம், நான் உங்களது அப்பா பெயரிலுள்ள விவசாய நிலம் மற்றும் வீடுகளுக்கான இடம் ஆகியவற்றிற்கான பட்டாவை வாரிசுதாரர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய நான் பரிந்துரை செய்து, நல்லபடியாக பட்டா பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்து அதனை பெற்று தருகிறேன், அதற்கு எனது செலவிற்காக ரூ.8,000/- கொடுங்கள் எனக் கேட்டார். நான் அவரிடத்தில் அப்பணம் அரசுக்கு ஏதும் செலுத்த வேண்டுமா எனக்கேட்டேன். அதற்கு அவர் இல்லை, அது எனது அலுவலக செலவிற்காக நீங்கள் எனக்கு தனியாக கொடுக்கவேண்டிய பணம் எனக் கூறினார். நான் அவரிடத்தில் என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும், விவசாயத்தால் நான் மிகவும் கஷ்டபடுகிறேன் எனக்கூறி அப்பணம் இல்லாமல் செய்து தரும்படி கெஞ்சிக் கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணத்தை விரைவில் தயார் செய்து, மறுநாள் காலையில் தன்னை வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொண்டார். பின்பு நான் அன்றைய தினம் காலை 11.30 மணிக்கு பேரையூர் தாலுகா அலுவலகம் சென்று எங்களது இடத்திற்கான சிட்டா மற்றும் அடங்கலை கேட்டு மனு கொடுத்துவிட்டு வந்தேன். பிறகு கடந்த 30.08.2024-ஆம் தேதி காலை 11 மணியளவில் VAO திரு.ராஜா அவர்கள் வேலை பார்க்கும் துள்ளுக்குட்டிநாயக்கனூர் VAO அலுவலகத்திற்கு சென்று அவரை சந்தித்து எங்களது

பட்டா பெயர் மாற்றம் சம்பந்தமாக கேட்டுவிட்டு, எங்களது இடத்திற்கான சிட்டா மற்றும் அடங்கல் சம்பந்தமாக பேரையூர் தாலுகா அலுவலகத்திற்கு மனு கொடுத்த விபரத்தை கூறினேன். உடனே அவர் என்னிடம், நான் கேட்ட எட்டாயிரம் ரூபாய் என்னாச்சு என்று கேட்டார். நான் அவரிடம், அய்யா என்னிடம் அவ்வளவு பணம் தற்போது இல்லை, ரொம்ப கஷ்டபடுகிறேன் பணம் இல்லாமல் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்யுங்கள் என கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் சரி போனால் போகுது உங்களுக்காக ரூபாய் ஆயிரத்தைக் குறைத்துக் கொள்கிறேன், நீங்கள் வரும் செவ்வாய் கிழமை (03.09.2024) அன்று காலையில் ரூபாய் ஏழாயிரத்தையும், நான் ஏற்கனவே சொன்ன UDR க்கு முன்பு மற்றும் பின்பு சிட்டா அடங்கலையும் எனது அலுவலகத்திற்கு வந்து என்னிடத்தில் கொடுங்கள், நான் உங்களுக்கு, உங்கள் இடத்திற்கான பட்டாவை வாரிசுதாரர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய நான் பரிந்துரை செய்து பட்டா கிடைக்க ஏற்பாடுகளை சிறப்பாக செய்து தருகிறேன், இல்லாவிட்டால் நீங்கள் அலைந்து கொண்டே இருக்க வேண்டியதான் என கண்டிப்பாக கூறி விட்டார். நான் வீட்டிற்கு வந்து எனது அம்மா மற்றும் சகோதரர்கள், சகோதரிகளிடம் பட்டா பெயர் மாற்றம் செய்ய VAO ராஜா அவர்கள் லஞ்சம் கேட்ட விபரத்தை கூறினேன். எங்கள் அனைவருக்கும் லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே, எங்கள் அப்பா பெயரிலுள்ள இடங்களுக்குக்கான பட்டாவை எங்கள் பெயரில் பெயர் மாற்றம் செய்ய பரிந்துரை செய்து ஏற்பாடு செய்து தருவதற்கு, என்னிடம் ரூ.7,000/- லஞ்சம் கேட்கும் துள்ளுக்குட்டி நாயக்கனூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ராஜா அவர்கள் மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்கமாறு கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தில் நான் கொடுத்த மனுவிற்கான ஒப்புகை சீட்டு எண். TN/REV/MDU/MMCR/27AUG24/9942949, எனது அப்பா பெயரில் உள்ள கணிணி சிட்டா (பட்டா எண். 798) அதற்குரிய பழைய பட்டா புத்தகம், எனது அப்பா பெயரில் உள்ள வீடுகளான சர்வே எண். 42-2 மற்றும் 42-11 ஆகிய இரண்டு இடங்களுக்கான தனித்தனி மனைவாரி தோராய பட்டா, எனது அப்பாவின் இறப்புச் சான்றிதழ், எங்கள் அப்பாவுக்கான வாரிசு உரிமை சான்று, என்னுடைய ஆதார் அட்டை மற்றும் 31.08.2024-ஆம் தேதி பேரையூர் தாலுகா அலுவலகத்தில் வாங்கிய விவசாய நிலத்திற்கு UDRக்கு முன்புள்ள அடங்கல் மற்றும் UDRக்கு பின்பு உள்ள சிட்டா ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், துள்ளுக்குட்டி நாயக்கனூர் கிராம நிர்வாக அலுவலர் திரு.ராஜா அவர்கள் கேட்ட லஞ்சப்

பணம் ரூ.7,000/-மும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, இப்படிக்கு (ஒ-ம்) XXXXXX (P. சின்னச்சாமி) 02.09.2024

Sir, Received the typed complaint today on 02.09.2024 at 16.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 10/2024, u/s. 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 17.00 hrs and took up investigation. Sd./-XXXXXX (T.Suriyakala) 02.09.2024, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr. P. Chinnasamy, S/o. Pandiyan, Door No. 5/135, West Street, Thullukutti Nayakkanur, Peraiyur Taluk, Madurai District along with Xerox copies of Acknowledgement of Petition in TN/REV/MDU/MMCR/27AUG24/9942949, Computer Chitta in Patta No. 798 in the name of the Complainant's Father Pandian and its old Patta Book, Manaivari Thoraya Patta for the house site lands in Thullukutty Nayakkanur Survey No. 42-2 and 42-11, Death Certificate of Complainant's Father, Legal heir certificate, Aadhar Card of the complainant, Adangal in Thullukutty Nayakkanur Survey No. 42-2 and 42-11 before UDR and Chitta in Thullukutty Nayakkanur Survey No. 42-2 and 42-11 after UDR are enclosed herewith and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(T. Suriyakala)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.

2.9.2024